**சார்பு நீதிமன்றம், துறையூர்.**
**முன்னிலை.திரு.C.விஜய்கார்த்திக்,M.A.,M.L.,**
**சார்பு நீதிபதி,**
**துறையூர்.**

**OS.No.13/2023**

வாதி தரப்பு வா.சா.3ன் வாக்குமூலம் 1873ம் ஆண்டில் 10வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திரு.S.கிருஷ்ணன், இருக்கை எழுத்தர் நிலை-2 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரதீப் | த/பெ | : | குலோத்துங்கன் |
| | | | க/பெ | : | |
| வயது | : | | ஊர் | : | |
| தொழில் | : | | அலைபேசி எண் | : | |
| தேதி | : | 22.01.2026 | முகவரி | : | |

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் வாதி தரப்பு சாட்சி ஆவேன். நான் என் முதல் விசாரணையை எழுத்து மூலமாக முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்ட விபரங்கள் எனக்கு நன்கு தெரிந்து என்னால் உண்மை என சொல்லப்பட்டவை தான். நான் தாக்கல் செய்துள்ள முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலத்தை எனது முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| வ. எண். | நாள் | ஆவண விபரம் | ஆவணத் தன்மை | |
|---|---|---|---|---|
| 1. | 20.04.2005 | ரங்கசாமி என்பவர் நடராஜன் என்பவருக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திர ஆவண எண்.1472/2005 | SRO copy | வா.சா.ஆ.26 |
| 2. | 26.09.2011 | ரங்கசாமி என்பவர் நாகராஜன் என்பவருக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திர ஆவண எண்.10321/2011 | SRO copy | வா.சா.ஆ.27 |

தாவாப்படி தீர்ப்பு வழங்க வேண்டுகிறேன்.

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. வழக்குரையில் சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். என்ன பரிகாரம் வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எங்களுடைய பாக சொத்துக்களை பதிவு செய்யப்படாத உயில் ஆவணத்தை வைத்து பிரதிவாதிகள் தான செட்டில்மெண்ட் ஏற்படுத்தியுள்ளதால் அந்த சொத்தில் பாகம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனக்கு மட்டும் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேனா அல்லது மற்றவர்களுக்கும் கேட்டுள்ளேனா, 5ம் பிரதிவாதிக்கு பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய வழக்குரையில் மேற்படி பரிகாரம் தான் கேட்டுள்ளேன் எனவும், வாக்குமூலத்தில் 5ம் பிரதிவாதியிடம் பாகம் கேட்டு தராததால் அவருக்கு எதிராக இந்த வழக்கை செய்துள்ளோம் என கூறியுள்ளேன் என்பதால் எனது வழக்குரைக்கும், பிரமாண வாக்குமூலத்திற்கும் முரணாக உள்ளது என்றால் சரியல்ல, நான் சொல்லவில்லை. வாக்குமூலத்தின் 7வது பத்தியில் 16.05.2005ம் தேதியில் ரொக்கமாக ரூ.70,000/- பெற்றுக்கொண்டு பாக விடுதலை பத்திரம் மாலா என்பவர் எழுதிக்கொடுத்தாக கூறியுள்ளேன், அந்த பாக விடுதலைப்பத்திரத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அந்த ஜுவனாம்ச விடுதலைப்பத்திரத்தில் 2005ம் ஆண்டு கூட்டுக்குடும்பமாக இருந்தோம் என குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. ரூ.70,000/- நான் கொடுத்தாக ஜூவனாம்ச பத்திரத்தில் எழுதவில்லை என்றால் சரிதான்.

2. 2005ம் ஆண்டு வரை வழக்கு சொத்து ரங்கசாமி ரெட்டியார் அனுபவத்தில் தான் இருந்து வந்தது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.26, 27 ஆவணம் பற்றிய விவரங்கள் தான செட்டில்மெண்ட் மூலம் தெரிந்து கொண்டு தற்போது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஏற்கனவே அந்த ஆவணங்கள் என்னிடம் இருந்தது. 10.11.2025ம் தேதி தான் நகல் போட்டு பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். 2005 கிரைய ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன். 2005ம் ஆண்டு ஏற்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம், ஜுவனாம்ச விடுதலைப்பத்திரம் எழுதப்பட்ட பிறகு ஏற்பட்டதா என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.26,27 ஆவணங்கள் வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2005ம் ஆண்டு கிரையப்பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்துதான் போட்டுள்ளேன் என்றால் சரிதான். கிரையப்பத்திரத்திற்கும்

வழக்கு சொத்திற்கும் சம்மந்தமில்லை என்றால் சம்மந்தமுள்ளது. என்ன சம்மந்தம் என்றால் நாங்கள் கூட்டுக்குடும்பமாக இருந்ததற்கு ஆதாரம் ஆகும். பத்திரத்தில் கூட்டுக்குடும்பமாக இருந்ததை காட்ட வாசகங்கள் உள்ளதா என்றால் இல்லை. வாசகங்கள் இல்லாததால் கூட்டுக்குடும்பமாக இருந்ததற்கு ஆவணம் இல்லை எனவும், நான் சாட்சி கையெழுத்து தான் போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கூட்டுக்குடும்பமாக இருந்ததால் சாட்சி கையெழுத்து கேட்டதால் போட்டுள்ளேன்.

3. ரங்கசாமி ரெட்டியாருடன் கூட்டுக்குடும்பமாக நான் வாழ்ந்ததற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.27 ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணத்திற்கும் வழக்கு சொத்திற்கும் சம்மந்தமில்லை என்றால் சம்மந்தமுள்ளது. என்ன சம்மந்தம் என்றால் அப்போதும் நாங்கள் அந்த குடும்பத்தின் அங்கம் என காட்ட தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.27 ஆவணத்திலும் கூட்டுக்குடும்பமாக இருந்தோம் என வாசகங்கள் எழுதப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.27 ஆவணத்தில் நான் ஒரு சாட்சியாக கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரிதான். சாட்சியாக கையெழுத்து செய்பவர்களை கூட்டுக்குடும்ப அங்கத்தினர் என கருத முடியாது என்றால் சரியல்ல. என் வாக்குமூலத்தின் 8 வது பத்தியில் உயில் பற்றி கூறியுள்ளேன், அந்த விவரம் எப்போது தெரியும் என்றால் சொத்துக்களை பாகம் கேட்கும்போது அவர்கள் கூறினார்கள். நான் எப்போது பாகம் கேட்டேன் என்றால் என் தாத்தா இறந்தபிறகு 2022 ல் பாகம் கேட்டேன். அப்போது உயில் பற்றி அவர்கள் கூறினார்கள். அந்த உயிலை வாங்கி படித்து பார்த்தோம். நாங்கள் கொடுத்த அறிவிப்பில் உயில் பற்றி விவரங்கள் கூறவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து ரங்கசாமி ரெட்டியார் உயிருடன் இருக்கும் காலத்தில் அவருடைய ஒரே மகன் ரகுபதி என்பவர் உயிருடன் இருந்ததால் அவர்பெயருக்கு பதிவு செய்யப்படாத உயில் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல, அது மோசடியான ஆவணம்.

4. ரங்கசாமி இறப்பதற்கு முன்பு அவருடைய வாரிசுகளில் ரகுபதி மட்டும்தான் உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். என் அப்பா இறந்த பிறகு தான் ரங்கசாமி இறந்தார். என் அப்பா இறந்தபோது நான் கோயம்புத்தூரில் இருந்தேன். என் அம்மா மட்டும் இங்கு இருந்தார். என் அம்மா தனியாகவும், நான் தனியாகவும் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். என் அம்மா

செங்காட்டுப்பட்டியில் வசித்து வருகிறார் என காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.26,27 கண்ட கிரையதாரர்களை நீதிமன்றத்தில் விசாரிக்க உள்ளேனா என்றால் தேவைப்படும் பட்சத்தில் விசாரிக்க தயாராக உள்ளேன். வழக்கு சொத்து ரங்கசாமி ரெட்டியாருக்கு சுயசொத்து, அவருடைய காலம் வரை அவர்தான் அனுபவம் செய்து வந்தார் எனவும், அவருக்கு அந்த சொத்தை எழுதிவைக்க உரிமையுள்ளது எனவும், அதனால் அவர் அந்த சொத்து பொறுத்து உயில் ஆவணம் எழுதிவைத்துள்ளதால் வழக்கு சொத்து பொறுத்து வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

5ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை வேண்டுகோளின்படி 30.01.2026 அன்று ஒத்திவைக்கப்படுகிறது.

/ உண்மை நகல்/

(ஒம்/-C.விஜய்கார்த்திக்)
சார்பு நீதிபதி,
துறையூர்